Registered as a Newspaper in Ceylon ★★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசீய தினசரி National Tamil Daily

மலர் 7 (7-1-66) இதழ் 329

விசுவாவசு மார்கழி 23 றமழான் பிறை 14 வெள்ளிக்கிழமை



SUNLIGHT DYERS & DRY CLEANERS
சன்லைட்
டையேர்ஸ் அன் றைக்கிளீனேர்ஸ்
பெரியகடை (ராணித்தியேட்டருக்கு அருகாமை) யாழ்ப்பாணம்.
போன் 474. தந்தி: றைக்கிளீன்.

## தங்க மாலை தமிழினத்துக்கு!

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் பொது மக்கள்சார்பில் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்திற்கு நேற்றுமுன்தினம்கோட்டை மைதானத்தில் நடைபெற்ற வரவேற்புக் கூட்டத்தில் அளிக்கப்பட்ட 15,000 ரூபாய் பெறுமதியரன 65 பவுண் மாலையை அவர் தமிழினத்திற்கு ஒரு பொதுச் சேவைக்காக அன்பளித்தார்.

தமிழினத்திற்கு ஒரு கைத்தொழில் நிலையமோ, வேறு கட்டடமோ கட்ட தங்க மாலையை அன்பளிப்பதாகவும், அதற்குத் தேவையான மிகுதிப் பணத்தைத்தான் கொடுப்பதாகவும் திரு. பொன்னம்பலம் கூறினர்.

தமிழ்க் காங்கிரஸ் நிர்வாக காரியதரிசி திரு. ரீ. சங்கரப்பிள்ளை, தங்கமாலையை திரு. பொன்னம்பலத்திற்கு அணிவித்து அரசியலில் தொடர்ச்சியாக 25 வருடம் சேவைசெய்ததற்காகவும் ஐக்யநாட்டிற்குச் சென்று தமிழ்மக்களினதும் நாட்டில்பெருமையானதும் உயர்த்தியதற்காகவும் அதனை அணிவதாகக் கூறினர்.

# கொழும்பில் ஆயுத பொலிஸ் காவல்

## லீவுகள் ரத்து; படைகளுக்கு உஷார்

### தமிழ்சட்டவிதிகள் நாளை சமர்ப்பிக்கப்படும்

### ஒத்திவைப்பு யோசனையை மந்திரிசபை நிராகரித்தது

கொழும்பு, வியாழன்

தமிழ்மொழி (விசேஷ) சட்டவிதிகளை இம்மாதம் 8-ந் திகதி பார்லிமெண்டில் சமர்ப்பிப்பதென்றும் இதை ஒத்திவைக்கவேண்டுமென்ற சிலரின் யோசனையை ஏற்றுக்கொள்ளவேண்டிய அவசியம் இல்லையென்றும் நேற்று நடைபெற்ற மந்திரி சபைக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக அறியப்படுகிறது.

### அமைதியை நிலைநாட்ட நடவடிக்கை

தமிழ்மொழி சட்டவிதிகள் பார்லிமெண்டில் சமர்ப்பதை எதிர்த்து எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ள நடவடிக்கைகளால் நாட்டில் அமைதியின்மை ஏற்படாமல் தடுக்கவும் சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்கவும் சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்வதென்றும் மந்திரிசபை முடிவு செய்ததாகவும் இந்த முடிவுக்கிணங்க பொலிஸ், இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவைகளின் தளபதிகளுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது.

### தலைநகரில் ஆயுதப் பொலிசார் காவல்

கொழும்பு நகரில் முக்கிய இடங்களில் இப்பொழுது ஆயுதந் தாங்கிய பொலிசார் காவல் புரிந்து வருகின்றனர். தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் வெள்ளவத்தைப் பகுதியிலும் ஆயுதந்தாங்கிய பொலிசார் காவல் புரிகின்றனர். பொலிசார், இராணுவத்தினர் ஆகியோரின் லீவுகள் யாவும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன. எந்த நிலைமைக்கும் தயாராக இருக்குமாறு அவர்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

### பார்வையாளர் கலரி மூடப்படும்?

கொழும்பு, வியாழன்

நாளை மறுதினம் தமிழ்மொழி உபயோக மசோதாவின் கீழான சட்டவிதிகள் ஜனப் பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பிக்கப்படும் பொழுது சபையின் பார்வையாளர் கலரி மூடப்பட்டிருக்கும் என நம்பப்படுகிறது.

பார்வையாளர் கலரி அன்றைய தினம் மூடப்பட வேண்டுமா இல்லையா என்பது பற்றி நாளை வெள்ளிக்கிழமை சபாநாயகர் முடிவு செய்வார்.

## இரு பௌத்த பிக்குகள் உண்ணாவிரதமிருக்கின்றனர்

கொழும்பு, வெள்ளி

நாளை பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் தமிழ் மொழி உபயோக மசோதாவை ஆட்சேபித்து இரண்டு பௌத்த பிக்குகள் நேற்று உண்ணாவிரதம்மேற்கொண்டனர்.

கொழும்பிலுள்ள ஸ்ரீலங்காவித்தியாலயத்தின் உதவி அதிபரான வண. மத்தளை சாசனதிலகா என்ற பிக்கு மசோதாவை வாபஸ் பெற வேண்டுமெனக்கோரி சுதந்திரசதுக்கத்தில் உண்ணாவிரதம் ஆரம்பித்துள்ளார்.

பொரளை சந்தியில் இன்னுமொருபௌத்த பிக்குமசோதாவை ஆட்சேபித்து உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளார்.

## "8-ந் திகதி அடையாள பொது வேலைநிறுத்தம் ?

பம்பலப்பிட்டி, வியா.

ஜனவரி மாதம் எட்டாம் திகதி ஒருநாள் அடையாள பொது வேலைநிறுத்தத்தை மேற்கொள்ளுமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கோரியுள்ளது.

தமிழ்மொழி (விசேஷ) மசோதா பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்படும் தினமான எட்டாம் திகதி சனிக்கிழமை, பொது அடையாள வேலைநிறுத்தம் செய்யுமாறு கோரும் தீர்மானம் நேற்று மாலை கொழும்பு நகரமண்டபத்தில் நடைபெற்ற எதிர்க் கட்சிகளின் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டமற்றும் தீர்மானங்கள் வருமாறு:-

● தமிழ்மொழி (விசேஷ) மசோதாவை அரசாங்கம் பார்லிமெண்டில் சமர்ப்பிக்கும் தினமான ஜனவரி எட்டாம் திகதி துக்கதினமாகக்

6-ம் பக்கம் பார்க்க

## "இனிமேல்தான் சிங்களம் நாடு முழுவதும் அமுலாகும்"

நேற்று மருதானையில் 'நாம் சிங்களவர் முன்னணியின்' சார்பில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் வண. தேவமோத்தவ அமரவன்ச தேரோ பேசுகையில்1966ம் ஆண்டு ஜனவரி 8ந் தேதிக்குப் பின்னர்தான் இலங்கை முழுவதிலும் சிங்களம் உத்தியோகமொழியாக்கப் போகிறது என்றார்.

1958ம் ஆண்டில் தமிழ் மொழிச் சட்டத்தை திரு. பண்டாரநாயக்கா கொண்டு வந்ததுமுதல் இதுவரை வடக்குக் கிழக்கு மாகாணங்களில் இதுவரை தமிழில்தான் அலுவல்கள் நடைபெற்றுவருகிறது. ஆனல் இம்மாதம் 8ந் தேதிக்குப் பின்னர் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் சிங்களமே உத்தியோக மொழியாக இருக்கப்போகிறது. தமிழர் வசதிக்காகத் தமிழ் மொழிபெயர்ப்பு வழங்கப்படும். இதுதான் தமிழர்களுக்கு அளிக்கப்படும் சலுகையென்று வண. அமரவன்சதேரோ கூறினர்.

தமிழ்மொழிச் சட்டவிதிகள் பற்றிப் பலரும் பலவிதமாகக் கூறுகின்றனர். அவர்களுக்குஇதுபற்றிவிளங்காமல் பலதையும் கூறுகின்றனர். தமிழ்மொழி விதிகளினல் சிங்கள மக்களுக்குத் துரோகம் இழைக்கப்பட்டுவிட்டதாக சிலர் கூறுகின்றனர். இதுதவறுஉண்மையில் இந்த விதிகளினல் சிங்கள மக்களுக்கே முழுவெற்றி கிடைத்துள்ளது என்று வண அமரவன்சதேரோ கூறினர்.

1956-ம் ஆண்டில் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வரப்பட்டதற்கும் தானே காரணமென்று கூறிய வண. அமரவன்சதேரோ, 1958-ம் ஆண்டில் தமிழ்மொழிச்சட்டத்தைக் கொண்டு வந்த திரு. பண்டாராாயக்காதான் சிங்கள மக்களுக்குத் துரோகமிழைத்தார் என்று கூறினர்.

### 10,000 டன் ஆஸ்திரேலிய மாவு

கொழும்பு, வியாழன்

கொழும்புத் திட்டத்தின் கீழ் 10000 டன் ஆஸ்திரேலியமாவுஇலங்கை வந்திருக்கிறது. இது உணவுப் பிரச்னையைத் தீர்ப்பது மட்டுமன்றி, வெளிச்செலாவணியைப் பாதுகாக்கவும் உதவும். இப்போது இறக்கு[illegible] வேலைகள் நடைபெற்று[illegible]கின்றன.

## "தமிழ்மொழி உபயோக சட்ட விதிகளை எதிர்ப்பதில்லை

## ஆனலும் முழு உரிமைகளையும் பெறுவதற்கு தொடர்ந்து முயற்சி"

### தமிழ்க்காங்கிரஸ் நிலைபற்றி திரு. ஜி. ஜி. விளக்கம்

யாழ்ப்பாணம், வெள்ளி

வடக்கு கிழக்கு மாகாணங்களில் மட்டும் தமிழையும் நிர்வாகமொழியாக்கி, தமிழிலும் நிர்வாகம் நடத்த வழிசெய்வதினல் மொழிப் பிரச்னை தீர்ந்துவிடப்போவதில்லை. இதனல் தமிழினம் திருப்திகொள்ள முடியாது. வடக்கு கிழக்கில் உள்ளது போல் மற்றும் ஏழு மாகாணங்களிலுள்ள தமிழ் பேசும் மக்களுக்கும் உரிமை வேண்டும். இல்லாவிடில் இன்னும் 25வருடகாலத்தில் 7 மாகாணங்களிலுள்ள பெரும்பான்மையான லட்சக்கணக்கான தமிழர்கள் சிங்களவர்களாக மாறக் [illegible] நிலைமை ஏற்பட்டு விடும். ஆதலால் [illegible] முது கிடைக்கும் அற்ப சொற்ப சலுகைகளை, முடிவான உரிமைகளாகக்கருதாமல், இலங்கை முழுவதும் தமிழுக்கு உரிமைபெற முயற்சிசெய்யவேண்டும்."

யாழ்ப்பாணம்முற்றவெளி மைதானத்தில் மேற்று முன்தினம் மாலை, யாழ்ப்பாணம் எம். பி. யும் தமிழ்க் காங்கிரஸ் தலைவருமான திரு. ஜி. ஜி. பொன்னமபலத்திற்கு அளிக்கப்பட்ட பிரமாண்டமான வரவேற்பில் அவர் பேசும்போது மேற்கண்டவாறு கூறினர்.

### தடுக்கமாட்டோம்

பெருந் திரளான மக்கள் திரண்டிருந்த இக்கூட்டத்திற்கு திரு. எஸ். ஜே. கனகநாயகம் தலைமை வகித்தார். திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் மேலும் கூறியதாவது:—

அற்பசொற்ப சலுகைகள் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு மட்டும் கிடைத்தால் அதை நாங்கள் தரவேண்டாம், எனத் தடுக்கமாட்டோம். ஆனல் அதோடு முடிவு என்று பிரமருக்குக் கூறி, மொழிப் பிரச்னைக்கு முற்றுப்புள்ளிவைக்க யாரும் நினைத்தால் அது முடியப்போகிற காரியமல்ல.

தமிழினம் தற்பொழுது தத்தளித்துக்கொண்டிருக்கிறது. ஆதலால் நிலைமை பற்றிவிளக்கவேண்டும். இம்மேடையில் மற்றக் கட்சிகளைக் கண்டிக்க நான் விரும்பவில்லை. ஏனெனில் இக்கூட்டத்தில் மற்றக் கட்சியைச் சேர்ந்த அன்பர்களும் வந்திருப்பார்கள்.

இந்நேரத்தில் தமிழினத்தைத் தேவையில்லாமல் பலியாக்கவேண்டாம் என்று மற்றக்கட்சியைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். தமிழ்க்காங்கிரஸ் சார்பில் தேசிய அரசாங்கத்தில் 3

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

வெற்றியைவிட தோல்வியே மேலான ஆசிரியர். அறிவால் திகைப்பு ஏற்படும்போது அன்பு நம்பிக்கையளிக்கிறது. உலகின் நோய்களுக்கெல்லாம் அன்பே மகாத்தன சஞ்சீவி. அன்பே வாழ்க்கையின் தர்மம். அன்பு தீங்கு எண்ணுது. தீமையைக் காணுது நல்லனவற்றையேகாணும்.

— சுவாமிசிவானந்தர்

ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு மார்கழி மீ 23 (7-1-66)

# தமிழ்மொழிச் சட்டவிதிகள்

தமிழ்மொழி உபயோக (விசேஷ) சட்டவிதிகள் நாளை ஜனப்பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது. இந்தச் சட்டவிதிகளை நாளை சமர்ப்பிக்காமல் ஒத்திவைக்க வேண்டுமென்ற யோசனையை மந்திரிசபை நிராகரித்துவிட்டது. என்ருலும் இந்த விதிகளுக்கு எதிர்க்கட்சியினர் மட்டுமல்ல அரசாங்கத்தை ஆதரிப்பவர்கள் சிலரும் கூட எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். இந்நவிதிகள் நிறைவேற்றப்பட்டுவிடுமென்பதில் ஐயத்துக்கு இடமில்லை.

இந்த விசேஷ சட்டவிதிகள் தமிழருக்கு அதிக உரிமைகளை அளிப்பதாகவும் சிங்களம்மட்டும் சட்டத்தை பயனற்றதாக்கிவிடுமென்றும் ஒருசாரார் கூறுகின்றனர். இந்தவிதிகளினுல் இலங்கை பிளவுபட்டுவிடுமென ஒருசாரார் கருத்துத் தெரிவிக்கின்றனர். இந்த விசேஷ விதிகளினுல் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியேயுள்ள தமிழ்பேசும் மக்கள் கஷ்டத்துக்குள்ளாவர் என்று சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்த சிலர் எதிர்க்கின்றனர்

அரசாங்கக் கட்சியைச் சேர்ந்தவர்களுக் கிடையிலும் இந்த விதிகள்பற்றி கருத்து வேற்றுமை இருப்பினும், அரசாங்கத்தைப் பலவீனப்படுத்தக் கூடிய விதத்தில் இதை எதிர்த்து வாக்களிப்பார்களென்று எதிர்பார்க்க இடமில்லை.

1958-ம் ஆண்டில் அப்பொழுது பிரதமராக விருந்த திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காதான் இந்த தமிழ் மொழி (விசேஷ விதிகள்) மசோதாவைக் கொண்டுவந்து சட்டமாக்கினுர். ஆனுல் இதுவரை அச்சட்டத்தை அமுல் நடத்துவதற்கான விதிகள் கொண்டுவரப்படவில்லை. முன்னைய அரசாங்கங்கள் தமிழ்ச்சட்டத்தை அமுல் நடத்துவதற்கு விதிகள் கொண்டுவரப்படுமென மூன்று தடவைகள் தங்களது சிம்மாசனப் பிரசங்கங்களில் தெரிவித்திருந்தபோதிலும் அவை அதைச் செய்யவில்லை. திரு. பண்டாரநாயக்காவின் கொள்கைக்கிணங்கவே இந்த விதிகள் கொண்டுவரப்படுவதாக அரசாங்கத்தினர் கூறுகின்றனர். ஆனுல் திரு. பண்டாரநாயக்காவின் கொள்கையைப் பின்பற்றுவதாகவும், பின்பற்றுவதற்கு உரிமை உள்ளவர்கள் தாங்கள்தானெனவும் கூறிக் கொள்பவர்கள் இந்த விதிகள் அமுலுக்கு வந்தால் சிங்களம் மட்டும் சட்டம் செயலற்றுப் போகுமென்றும் சிங்கள இனம் தமிழருக்கு அடிமையாகிவிடுமென்றும் கூறுகின்றனர்.

இந்தத் தமிழ்ச்சட்டவிதிகள் திரு. பண்டாரநாயக்கா, முன்னர் கொடுக்க ஒப்புக் கொண்டதற்கும் குறைவான உரிமைகளையே அளிப்பதாக இருக்கிறதென்றும் இந்த 'சலுகைகளை' பெறுவதன் மூலம் தமிழரின் முழு உரிமைகளையும் பெறுவதற்குத் தடை ஏற்பட்டுவிடக் கூடுமென்றும் தமிழ்க்காங்கிரஸ் தலைவர் கூறுகிறுர். இப்பொழுது உள்ள நிலையில், கிடைக்கக்கூடிய குறைந்த உரிமைகளையாவது பெற்றுக்கொண்டு பின்னர் முழு உரிமைகளையும் பெறுவதற்குத் தொடர்ந்து முயற்சிசெய்யலாமென்று தமிழரசுக்கட்சியினர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

தமிழ்ச் சட்டவிதிகள் நாட்டில் மீண்டும் ஒரு பெரும் சர்ச்சையைக் கிளப்பி, தேசிய ஐக்கியத்துக்கு ஓர் ஆபத்தான நிலையை ஏற்படுத்தியுள்ளது. அரசியல் காரணமாகப் பெரும்பான்மைச் சமூகத்தவர்களுக்கிடையில் தவருன விளக்கங்களும், தவருன வியாக்கியானங்களும் கொடுக்கப்படுகின்றன. இதில் மகாசங்க எனப்படும் பௌத்த குருமார்கள் சிலரும் சம்பந்தப்பட்டிருப்பதால், உண்மை நிலையை, —இந்நாட்டில் வாழும் சிறுபான்மை இனத்தவரின் உரிமைகள் பறிக்கப்பட்டு, நாடு விடுதலைபெற ஒத்துழைத்த அவர்களுக்குத் துரோகமிழைக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பிரதமர் துணிச்சலுடன் எடுத்துக்கூறவேண்டும். 'சிங்கள-பௌத்த மக்களுக்குத் துரோகம் இழைக்கமாட்டேன்' என்று திருப்பித் திருப்பி கூறுவதால் தமிழ் பேசுமினத்துக்கு துரோகமிழைக்கப்படவில்லை என்ற அர்த்தம் வலுப்பெற்றுவிடும்.

இதேசமயம் மொழிப் பிரச்னை ஒரு தேசியப் பிரச்னை ஆதலால் அதற்குத் தேசியரீதியில் தீர்வு காண்பதற்கு எதிர்க்கட்சித் தலைவர்களும் தங்களது ஒத்துழைப்பையும் ஆதரவையும் பிரதமருக்கு அளித்திருந்தால் சந்தர்ப்பத்தை அரசியலுக்காகப் பயன்படுத்த எவரும் முனைந்திருக்க மாட்டார்கள். நாட்டின் தேசிய ஐக்கியமும் வலுப்பெற வாய்ப்புக் கிடைத்திருக்கும்.

எனினும் தமிழ்பேசும் மக்களைப் பொறுத்தவரையில் இந்தத் தமிழ் மொழிச் சட்டவிதிகள் தமிழ்பேசும் மக்களுக்கு, அவர்களுடைய இழந்த உரிமை அனைத்தையும் பெற்றுக்கொடுக்கக் கூடியதாக இல்லையென்பதை தமிழ்பேசும் மக்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கும் அரசியல் கட்சிகள் ஒப்புக்கொள்கின்றன. இந்த விதிகளை எதிர்ப்பதால் கிடைக்கும் சில உரிமைகளைக்கூட இழந்துவிடநேரிடலாமென அவர்களும் அஞ்சுகின்றனர். இந்த விதிகளை ஏற்றுக் கொண்டு தொடர்ந்து மிகுதி உரிமைகளையும் பெற முயற்சி செய்ய வேண்டுமென்பதில் [illegible] களுக்குள் அபிப்பிராய பேதமில்லை. இச்சந்தர்ப்பத்திலாவது தமிழ்பேசும் பிரதிநிதிகள் தமக்குள் சிந்தித்து ஆலோசனை செய்து, முழு உரிமைகளையும் இதர அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்பையும்பெற்று அடைவதற்கான ஒரு திட்டத்தைத் தயாரித்தால் தமிழ்பேசும் மக்களின் எதிர்காலம் நம்பிக்கையளிப்பதாக இருக்கும்.

ஆசிரியருக்குக் கடிதம்

## 'தேசிய ஒற்றுமைக்கு உழைக்குக'

உலகில் சில நாடுகளே பிரச்னைகளும் கஷ்டங்களுமின்றி வாழக் கூடியதாகவிருக்கின்றன. இப்படியான சூழ் நிலையில் இலங்கையும் தாக்கப்படுமோ என்று திர்பார்ப்பதற்கில்லை, சில நாடுகளுக்கு முன்மாதிரியாகவும் எடுத்துக்காட்டாகவும் விளங்க வேண்டிய நமது நாடு சில தேவையற்ற பிரச்னைகளினுலும் வேறு பல செய்கைகளினுலும் வருந்தக்கூடிய நிலைக்கு வந்துளளது. சில பிரச்னைகளை நாம் இலகுவாக தவிர்த்திருக்கலாம்.

இங்கேயுள்ள மூன்று சர்வகலாசாலைகளும் சிறந்த அறிவு, ஒழுக்கம் முதலியவற்றை புகட்டும் நிலையங்களாக அமைந்திருக்கின்றன. ஆனுல் அங்கிருந்து பரவும் சில செய்கைகளையும் நாம் தவிர்த்திருக்கமுடியும்.

இதைவிட தமிழ் மொழியின் அறிவு வளர்ச்சியும் தேசிய உபயோகமும் ஒரு அளவிற்கு தடைபட்டுள்ளது. சோல்பரித்திட்டத்தின் கீழ் இலங்கையின் சுதந்திரத்தை வெளிநாட்டார் ஆதிக்கத்திலிருந்து பெற்று ஒற்றுமையை நிலைநாட்ட முயற்சித்ததுபோன்று இன்று தமிழ் பேசும் மக்கள் சிங்கள மக்களுடைய நல்மதிப்பையும் ஒற்றுமையையும்பெற நல்லதொரு சூழ்நிலையை ஏற்படுத்திக்கொண்டு வருகிருர்கள்.

தமிழுக்குக் கொடுக்கப்படும் மிகவும் குறைந்தளவும் முக்கியமற்றதுமான சில சலுகைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதை நாம் பார்க்கும் பொழுது வருந்தவேண்டியிருக்கின்றது. காலஞ்சென்ற பண்டாரநாயக்காவின் தமிழ்மொழிச் சட்டவிதிகளைத்தான் இன்று பிரதமர் திரு. டட்லிசேனநாயகா செயல்படுத்த முற்பட்டுள்ளார். காலஞ்சென்ற பண்டாரநாயக்காவின் தமிழ் மொழிக் கொள்கை தமிழ் மொழியை இலங்கையின் தேசிய வாழ்வில் மிகவும் சிறிதானநிலைக்குக் கொண்டு வந்துவிட்டது.

பண்புவாய்ந்த சிங்கள மக்கள் வணக்கத்துக்குரிய மகா சங்கத்தின் ஆலோசனைப்படி தேசிய ஒற்றுமையை நிலை நாட்டவேண்டும். பிறப்பில் இந்துவாகப்பிறந்து பின்னர் பௌத்த மதத்தைக் கடைப்பிடித்த அசோகச்சக்கரவர்த்தியின் கொள்கையை இத்துறையில் பின்பற்றுவது சாலச்சிறந்ததாகும். தமிழ் மொழிக்குத் தகுந்த இடம் கொடுப்பதால் நாடு இரண்டாகப் பிரிந்துவிடுமென்ற கருத்தைத் தமிழ் மக்கள் விரும்புவார்கள் என்று கூறுவது சரியானதல்லவென்று நான் கருதுகிறேன். எப்படியிருந்தபோதிலும் இந்தப் பிரிவுகளை ஒருமுகப்படுத்தவும் தேசிய ஒற்றுமையை நாட்டில் வளர்க்கவும் உலக சமாதானத்தை நிலைநாட்ட முயன்ற திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் உதவியுடன் தமிழர் பிரச்னையை உணர்ந்த திருவாளர்கள் பிலிப் குணவர்த்தன, என். எம். பெரேரா, கொல்வின் ஆர். டி. சில்வா, எஸ். ஏ. விக்கிரமசிங்கா, பீற்றர் கெனமன், ஆர். ஜி. சேனநாயக்கா ஆகியோர்களினதும் சிறந்த முயற்சிகளும் தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நாட்டின் சுபிட்சத்திற்கும் நல்வாழ்விற்கும் வழி வகுக்கும்.

எஸ். சிவசுப்பிரமணியம்,
கொழும்பு 12.

# மீண்டும் தலைதூக்கும் போலியோ நோய்

## பத்து லட்சம் பிள்ளைகளுக்கு தடுப்பு மருந்து அவசியம்

'போலியோ மயலிற்றிஸ்' (போலியோ) என்னும் இளம்பிள்ளை வாதம் மறுபடியும் இலங்கையில் தலைதூக்குகிறது. விடுதலைக்குப் பின் இன்று பள்ளிக்கூடம் செல்லும் சிறுவர்கள் எல்லோருக்கும் கட்டாயமாகத் தடுப்பு மருந்து கொடுக்க வேண்டுமென்று அரசாங்கம் தீர்மானித்துள்ளது. சுமார் பத்து லட்சம் குழந்தைகள் தடுப்பு மருந்து பாவிக்காமல் இருந்துவருகிருர்கள் என்று கணிக்கப்பட்டிருக்கிறது

இந்நோய் 1962ம் வருடத்தில் இலங்கை முழுவதிலும் பெருமளவில் பரவியது. சுமார் 1,500க்குமேற்பட்டவர்கள் அப்பொழுது இதனுல் தாக்குண்டு. 175 பேர்மட்டில் இறந்து, நூற்றுக்கணக்கானவர்கள் முடக்கப்பட்டார்கள். 4 வருடத்துக்கு ஒருதடவை 'போலியோ' தனது முழு ஆவேசத்துடன் தாக்குமாதலால் இவ்வருடம் விசேஷ தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

மூன்று மாதக் குழந்தைகள் முதல் எட்டு வயதுச் சிறுவர்களையே இந்நோய் பெரும்பாலும் பற்றிக் கொள்ளுகிறது. வேளைக்கு இதைத் தடுக்கும் பரிகாரம் தேடாவிட்டால் எதிர்கால சந்ததிகள் அங்கவீனர்களாகக்கூடும்.

இக்கொடிய நோய் வயிற்றிலுள்ள ஜீரண ஸ்தானங்களில் உற்பத்தியாகி, பின் முக்கியமான நரம்புகளைத் தாக்கி, கை கால் முதலிய அவயவங்களை முடக்கிவிடும். நோய்வாய்ப்பட்டவர்களின் உடற்கழிவுகள் மூலம் இந்நோய் பரவுதலால் அசுத்தமான சுற்றுடல்களில் மிகவும் விரைவில் கொள்ளை நோயாக மாறிவிடும்.

போலியோவைத் தடுப்பதற்கு முதலில் ஊசிமருந்து ஏற்றப்பட்டுவந்தது. பிற்பாடு வாயால் உட்கொள்ளக்கூடிய மருந்து கண்டுபிடிக்கப்பட்டபின் ஊசி மருந்து கைவிடப்பட்டது. டாக்டர் ஸபின் என்பவர் கண்டுபிடித்த இந்த உட்கொள்ளும் மருந்தைப் பெருமளவில் உபயோகித்த நாடுகளில் இலங்கையும் ஒன்று. 1962-ம் வருடத்தில் இந்த மருந்தே இலங்கை முழுவதிலும் உபயோகிக்கப்பட்டது சிறு குழந்தைகள் இதை மிகச் சுலபமாக உட்கொள்வார்கள். மருந்தில் மூன்று துளிகளை சீனிப்பாணியில் விட்டு அதை சிறு விஸ்கோத்துகள் மீது தடவிக் கொடுத்த போது சிறுவர்கள் எதுவித கஷ்டமுமின்றி அவற்றை உட்கொண்டனர். இம்

(6ம் பக்கம் பார்க்க)

## நாடும் நடப்பும்

தமிழ் மொழி (விசேஷ) சட்டவிதிகள் நாளை பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது. இந்த விதிகளினுல் இந்நாட்டிலுள்ள தமிழ் பேசும் மக்களின் தலைவிதியை நிர்ணயிக்க முடியுமா?

தமிழ் மொழிச் சட்டவிதிகளை ஆதரித்து சில தினங்களுக்குமுன் பேசிய முன்னுள் வெலிமடைப் பிரதிநிதி கே. எம். பி. ராஜரத்தின இப்பொழுது இந்த விதிகளைக் கொண்டுவரக் கூடாதென்றும் இதை ஒத்திவைக்க வேண்டுமென்றும் பிரதமருக்கு அனுப்பியுள்ள ஒருதந்தியில் கேட்டுள்ளாராம்.

மகா சங்க என்ற பிக்குகள் ஸ்தாபனம், தங்களுடன் கலந்தாலோசனை செய்த பின்பே இந்தத் தமிழ் விதிகளைப் பார்லிமெண்டில் சமர்ப்பிக்க வேண்டும் என்று கூறியதை ராஜரத்தினுவும் ஆதரிக்கிருர். இது மகாசங்காவுக்கு வெற்றியா, எதிர்க்கட்சிகளுக்குக் கிடைத்த ஒரு வெற்றியா?

ஃ ஃ ஃ

தமிழ் மொழிச் சட்டவிதிகள் இம்மாதம் 8-ந் திகதி ஜனப்பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது இது பண்டாரநாயக்காவின் பிறந்ததினமாகும். எண் சோதிட நிபுணர்களின் கருத்துப்படி எட்டு நல்லதல்லவாம். 1958-ம் ஆண்டில் இந்தத் தமிழ் உபயோக மொழி மசோதா கொண்டுவரப்பட்டது மொத்த எண் எட்டுவரும் திகதியில் தானும். பண்டா—செல்வா ஒப்பந்தம் கைச்சாத்தானதும் எட்டு; 1958-ல் கலகம் தொடங்கியது எட்டு எண்ணில் தானும்.

எண் என்ன செய்யும் நடப்பதெல்லாம் நன்மைக்கே என்று கருதுபவர்களுக்கு!

ஃ

பைத்தியங்கள் யாழ்ப்பாணத்தில் அதிகரித்துவருவதால், யாழ்ப்பாணத்தில் ஒரு பைத்தியக்கார ஆஸ்பத்திரி கட்டப்படவேண்டும் என யாரோசிலர் சிலமாதங்களுக்குமுன் யோசனை தெரிவித்திருந்தனர்.

நமது ஆபீஸுக்கு ஒருவர் அடிக்கடி வருவார். யாருடனும் அவர்பேசமாட்டார். கடிதங்கள் கொண்டுவருவார், நமது தபாற்பெட்டிக்குள் அவற்றைப் போட்டுவிட்டு உடனடியாகத் திரும்பிவிடுவார். 'ஐ' என்று ஆங்கிலத்தில் விலாசம் எழுதிய கடித உறைக்குள் கத்தைகத்தையாக அவரது எழுத்தோவியங்கள் இருக்கும். எல்லோரும்அவரை பைத்தியம் என்றுதான் நினைக்கிருர்கள். அவர் ஆங்கிலத்திலும், தமிழிலும்கவிதைகள்கூட எழுதுகிருர். அரசியல் தொடக்கம் சகல விஷயங்களைப் பற்றியும் அவர் எழுதுவார்.

நேற்று அவர் எழுதிய பத்துப்பக்கக் கடிதத்தில் ஆங்கிலத்தில்இரண்டு முக்கிய விஷயங்களைக் குறிப்பிட்டிருந்தார்.

"இந்தியாவைப் பலஹீனப்படுத்துவதற்காக நாகர்கள் சுதந்திரம் கோருவதை பிரிட்டன் உற்சாகப்படுத்தி வந்தது. இதே நோக்குடன் தான், குருகோவிந்தவின் ஆயுதங்களை இந்தியாவுக்குத் திருப்பிக்கொடுத்து சீக்கியர்கள் தனிநாடு கோர ஆதரவளிக்கிறது."

'மக்கள் தங்கள் வாழ்க்கையில் வேண்டுவது உணவு, உடை, வீடு. இவைதவிர மதகுருமார்கள் உறுதியளிக்கும் ('நிர்வாண') மோட்சத்தையல்ல'

இவர் பைத்தியமா? நீங்களே சிந்தியுங்கள்.

-- ஊர்சுற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டாஷ்கண்ட் பேச்சுக்கள் முக்கிய கட்டத்தை அடைகிறது

## ரஷ்யப் பிரதமர் ஏற்று வரும் மிக முக்கிய பாகம்

### உலகில் பெரும் சிரத்தை

டாஷ்கண்ட், ஜன. 6

டாஷ்கண்டில் இன்று இந்திய, பாகிஸ்தான் தலைவர்களுக்கிடையே தொடர்ந்து நடைபெறவிருக்கும் பேச்சுக்கள், முக்கிய பிரச்னைகளில் ஒரு நெருக்கமான கட்டத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. பேச்சுக்கள் பற்றிய முன்னேற்றத்தை இரு தலைவர்களும் ரஷ்யப் பிரதமருக்கு அவ்வப்போது தெரிவித்துவருகிறார்கள்.

நேற்று திரு. சாஸ்திரி ரஷ்யப் பிரதமர் கோஸிஜினுடன் இரண்டரை மணி நேரம்பேசினர். டாஷ்கண்ட் வந்தபின் 4-வது தடவையாக அவர் ரஷ்யப் பிரதமரைச் சந்திக்கிறார். அவசியமானபோது மேலும் பல சந்திப்புக்கள் இடம்பெறும் எனக் கூறப்பட்டது.

#### நேசமான பேச்சுக்கள்

நேற்று நடைபெற்ற அயூப்-சாஸ்திரி சந்திப்பு இதுவரை இருந்ததைவிட மிக நேசமான முறையில் இருந்ததென்றும், இருவரும் 1 மணி நேரம் பேசினர் என்றும், சரியான திக்கிலேயே பேச்சுக்கள் போய்க்கொண்டிருக்கின்றன என்றும் சோவியத் வட்டாரங்கள் கூறின.

இந்திய-பாகிஸ்தான் உறவுகள் அபிவிருத்தியடைய வேண்டும் என்பதிலும், இந்த மகாநாட்டை அதற்காக சரியான முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதிலும் இருவரும் தீவிர ஆவல் காட்டிவருவதாகக் கூறப்பட்டது.

'நாங்கள் அதிருப்தியடையவில்லை. ரஷ்யப் பிரதமர் மிகவும் முக்கியமான, சரியான, ஜாக்கிரதையான பாகத்தைவகித்துவருகிறார்' என இந்திய அதிகாரி திரு. ஸி. எஸ். ஜா நிருபர்களிடம் கூறினர்.

#### மந்திரிகள் கூட்டம்

இன்றைய மந்திரிகள் அந்தஸ்திலான கூட்டம் ஆலோசனைப் பட்டியலை முடித்துவிடும் என்றும், சாஸ்திரி—அயூபுக்கிடையே உண்மையான பேச்சுக்கள் நாளை ஆரம்பமாகும் என்றும் கூறப்படுகிறது. பிரச்னைகளைத் தீர்ப்பதில் படைபலத்தை உபயோகிக்காமல் இருக்கும் விஷயமும் பட்டியலில் இடம் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேசமயம் இன்றைய சாஸ்திரி-அயூப் சந்திப்பு மிக முக்கியமானதாய் இருக்கும் என அறிவிக்கப்படுகிறது.

#### அடிப்படைக்காரணம்

நேற்றைய மந்திரிகள் கூட்டத்தில் பாரத-பாகிஸ்தான் சண்டைக்கு அடிப்படைக்காரணம்காஷ்மீர் தான்என திரு புட்டோ குறிப்பிட்டார் அதற்கு மேல் அவர் எதுவும் கூறவில்லை. உடனடியாக திரு. சுவர்ண்சிங் இதை மறுத்தார். சண்டைக்கான அடிப்படைக்காரணம் பற்றி நேற்று சிறிது விவாதம் நடைபெற்றபோது இச்சம்பவம் இடம் பெற்றது. காஷ்மீர், பேச்சுக்கு உட்பட்டதல்ல என்றும் திரு. சிங் கூறுனர்.

சாஸ்திரி-அயூப் சந்திப்பை ரஷ்யப் பத்திரிகைகள் முதல் பக்கத்தில் பிரபல்யமாகப் பிரசுரித்துவருகின்றன.

அயூப் இன்று கோஸிஜினை சந்திக்கிறார்.

#### உலக சிரத்தை

டாஷ்கண்ட் பேச்சுக்கள் உலகம் முழுதும், குறிப்பாக ஆபிரிக்கா, தென் கிழக்காசியா, கிழக்கு ஐரோப்பா ஆகிய நாடுகளில் பெரும் சிரத்தையைத் தோற்றுவித்திருக்கிறது.

அல்ஜீரியப் பிரமர் கர்னல் பொமீதியன் நேற்று இந்திய பாகிஸ்தானிய, ரஷ்யத் தலைவர்களுக்கு பேச்சுக்கள் வெற்றிபெறவேண்டுமென வாழ்த்துக்கள் அனுப்பினர்.

எகிப்து, ஜப்பான், செக்கோஸ்லோவேகியா, யூகோஸ்லேவியா நாடுகளின் பத்திரிகைகள் டாஷ்கண்ட் சந்திப்புப் பற்றி பிரபல்யமாக எழுதிவருகின்றன.

சாஸ்திரி-அயூப் பேச்சுக்களில் பொதுவான உடன்பாடு காண்பதில் கஷ்டம் ஏற்பட்டிருப்பதாய் லண் செய்திகள் கூறுகின்றன.

---

வடவியட்னும்

## சமாதானத்துக்கு வராவிட்டால் கடும் விமானத் தாக்குதல்!

மாஸ்கோ, ஜன. 6

ரஷ்ய கம்யூனிஸ்ட் மத்திய கமிட்டிக் காரியதரிசி திரு. ஷெலபின் தலைமையிலான தூதுகோஷ்டி இன்று வடவியட்னுமுக்குப் புறப்படுகிறது.

வியட்னுமின் தற்போதைய நிலைமை பற்றி வடவியட்னும் தலைவர்களுடன் திரு ஷெலபின் பேச்சு நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில் வியட்னுமில் அமைதியை ஏற்படுத்த உதவுமாறு ஐ. நா. உறுப்பு நாடுகளுக்கும், யுதாண்டுக்கும் அமெரிக்கா விண்ணப்பித்திருக்கிறது.

அமெரிக்கப் பிரதிநிதி திரு. கோல்ட்பர்க் யுதாண்டுக்கு எழுதியுள்ள கடிதத்தில் ஜெனிவா மகாநாட்டு அடிப்படையில் பேச இப்பொழுது தயாராய் இருப்பதாகக் கூறியிருக்கிறார்.

இரு வியட்னும்களும் ஒன்று சேர்வதை ஜனநாயக முறையில் தென்வியட்னும் மக்கள் நிர்ணயிக்க வழி ஏற்பட்டவுடன், அமெரிக்கா தனது துருப்புக்களை வாபஸ் பெறச் சம்மதிக்கும் என கடிதம் மேலும் குறிப்பிடுகிறது.

வியட்னுமில் சமாதானத்தை ஏற்படுத்த அமெரிக்கா தன்னுல் இயன்ற அனைத்தையும் செய்யும் என திரு. கோல்ட்பர்க் நிருபர்களிடம் தெரிவித்தார்.

பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்சன் ரஷ்யப் பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்தில் வியட்னுமில் அமெரிக்க சமாதான முயற்சியை பிரிட்டன் ஆதரிப்பதாயும் ரஷ்யாவும் இதை ஆதரிக்க வேண்டும் என்றும் கேட்டிருக்கிறார்.

இதற்கிடையில் வியட்னும் சம்பந்தமான அமெரிக்க தலைமைத் தளபதி ஜெனரல் வீலர், சமாதானப்பேச்சுக்களை நிராகரித்தால், வடவியட்னும் மீது மீண்டும் குண்டு வீச்சு நடத்தும்படி தாம் சிபார்சு செய்யப் போவதாய்க் கூறினர். ராட்சஸ 'பி 52' வெடிகுண்டு விமானங்கள் அங்கு உபயோகிக்கப்படும் என்றும் அவர் கூறினர். இதுவரை இத்தகைய விமானங்கள் வியட்காங் இலக்குகள் மீது மட்டுமே உபயோகிக்கப்பட்டன.

ஹவானுவில் நடைபெறும் ஏகாதிபத்திய, காலனி எதிர்ப்பு மகாநாடு, வியட்னும் சம்பந்தமாக ஒரு விசேஷ உபகமிட்டியை நியமித்திருக்கிறது.

நேற்றைய சண்டையில் வியட்காங்கியருக்குப்பலத்த சேதம் ஏற்படுத்தப்பட்டது.

வியட்னுமிய புதுவருடத்தில் யுத்தநிறுத்தம் செய்யும் வியட்காங் யோசனையை தென்வியட்னும் ஏற்றுக் கொண்டிருக்கிறது.

---

## மங்கோலியா செல்வார்

மாஸ்கோ, ஜன. 6

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பிரஸ்னேவ் இவ்வாரம் மங்கோலியாவுக்கு விஜயஞ்செய்வார். சீன-சோவியத் தகராறு பற்றி அவர் மங்கோலியத் தலைவர்களுடன் பேசுவார்.

---

## சீனு ஆட்சேபம்

பீகிங், ஜன. 6

டகோமி, தன்னுடன் ராஜிய உறவை முறித்துக்கொண்டது குறித்து சீனு ஆட்சேபனை தெரிவித்திருக்கிறது. இது ஒருதலைப்பட்சமான செயலென அது கூறியிருக்கிறது.

---

## 4 கோடி சீனர்கள் முகாம்களில்

ஹாங்காங், ஜன. 6

4 கோடி சீனர்கள் கைதிகள் முகாம்களில் வைக்கப்பட்டிருப்பதாக ஹாங்காங்குக்கு வந்துள்ள சீன அகதிகள் தெரிவித்திருக்கின்றார்கள்.

---

## மொரார்ஜி தேசாய்

புதுடில்லி, ஜன. 6

திரு. மொரார்ஜி தேசாய் தலைமையில் நிர்வாக சீர்திருத்தக் கமிஷன் ஒன்று நியமிக்கப்பட்டிருக்கிறது.

---

இந்தோ - பாக். விஷயத்தில்

## 'பிரிட்டன் சரியான போக்கையே கடைப் பிடித்தது'

### பிரதமர் வில்ஸன் கடிதம்

லண்டன், ஜன. 6

இந்தோ-பாகிஸ்தான் சண்டையின்போது பிரிட்டிஷ் அரசாங்கமும், பத்திரிகைகளும், ரேடியோவும் பாகிஸ்தானுக்கு சார்பான மனப்பான்மை காட்டியதுபற்றி இந்தியத் தலைவர்கள் திரும்பத் திரும்பத் தம்மிடம் கண்டனம் தெரிவித்ததாக திரு. நோபல்பேக்கர் பிரிட்டிஷ் பிரதமர் வில்சனுக்கு எழுதியிருக்கிறார்.

திரு. பேக்கர் தலைமையில் பிரிட்டிஷ் பார்லிமெண்ட் கோஷ்டி ஒன்று சமீபத்தில் இந்தியாவில் சுற்றுப்பிரயாணம் செய்தது.

திரு. வில்சன் எழுதியுள்ள பதிலில் தனது போக்கு நியாயமானது என்றும், ஒரு தலைப்பட்சம் எதுவும் கடைப்பிடிக்கவில்லை என்றும் கூறியிருக்கிறார். காஷ்மீர் பிரச்னையை படைபலத்தால் தீர்க்க முடியாதுஎனத் தாம் ஏற்கனவே தெரிவித்திருப்பதாய் திரு. வில்சன் கூறியிருக்கிறார்.

பி. பி. ஸி. பாரபட்சமின்றி செய்திகளை ஒலிபரப்பி வருகிறது என்றும், ஆனால் இந்தியாவில் அதற்கெதிராக ஏற்பட்டிருக்கும் கருத்தை மாற்றுவது இயலாத ஒன்றாய் இருக்கிறது என்றும் பி. பி. ஸி. டைரக்டர் ஜெனரல், திரு. பேக்கருக்கு எழுதியிருக்கிறார்.

---

## உதை பந்தாட்ட நட்சத்திரம் பேலுக்கு திருமணம்

ஸாபேலோ (பிரேஸில்) ஜன. 6

பிரேஸில் உதைபந்தாட்ட நட்சத்திரமான பேல் அடுத்த மாதம் குடும்பத்தில் அமைதியான விவாகம் செய்து கொள்ளவிருக்கிறார். அப்போது பிரேஸிலில் களியாட்ட விழாக்காலம்.

25 வயதான பேல் இது பற்றி எதுவும் கூறுவிடினும் ஸாபேலோவின் மாலைப்பத்திரிகை ஒன்று முதல்பக்கத் தலைப்புச்செய்தியாகஇதைப் பிரசுரித்திருந்தது.

பெப்ரவரி 22-ம் திகதி என்று ஒரு பத்திரிகையும் பெப்ரவரி 21-ம்திகதிஎன்று மற்றொரு பத்திரிகையும் கல்யாணதினமாகக் குறிப்பிட்டிருந்தன. 20 வயதான ரோஸ்மியரை அவர் மே அல்லது ஜூன் மாதம்மணப்பார் என முன்பு வந்த செய்திகள் கூறின். அப்போது தான் இங்கிலாந்து-பிரேஸில் உலக உதைபந்தாட்டப்போட்டி நடக்கவிடுக்கிறது.

தனது விவாகம்பற்றிய செய்தி பிரபலமாகாமலிருப்பதற்காகவே, களியாட்ட விழாக் காலத்தை பேல் தேர்ந்தெடுத்தார். தேன் மதியை அவர் ஐரோப்பாவில் கழிப்பார். (பி.டி.ஸி.)

---

கிளர்ச்சிக்கு

## ஆதரவு அளிப்பதாக கண்டனம்

பாக்தாத், ஜன. 6

குர்திஷ் கிளர்ச்சிக்காரர்களுக்கு ஈரான் ஆதரவளிப்பதாக, ஈராக் ரர்ணுவத் தலைவர் குற்றஞ்சாட்டியிருக்கிறார். ஈரான்-ஈராக் தகராறில் ஸிரியா ஈராக்கை ஆதரிப்பதாக அறிவித்திருக்கிறது.

---

## எண்ணெய்க்கு தடை விதியோம்

லிஸ்பன், ஜன. 6

ரொடீஷியாவுக்கு எண்ணெய்த் தடைவிதிக்க, மொசாம்பிக்கிலுள்ள எண்ணெய்க் கம்பெனி மறுத்துவிட்டது.

---

## ஒரு கோடி அகதிகள் வந்தனர்

புதுடில்லி, ஜன. 6

இதுவரை பாகிஸ்தானில் இருந்து ஒரு கோடி அகதிகள் இந்தியா வந்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது. இவர்களில் 48000 கிறிஸ்தவர்களும், 20000 பௌத்தர்களும் இருக்கின்றனர்.

---

## ஸ்மித் வழிக்குவருவார்

லண்டன், ஜன. 6

ரொடீஷியா மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத்தடை இப்போது அந்நாட்டைப் பாதிக்க ஆரம்பித்திருப்பதாயும், விரைவில் ஸ்மித் வழிக்குவருவார் என்றும் காமன்வெல்த் காரியாலயத் தலைவர் திரு. ஆர்னேல்ட் ஸ்மித் கூறியிருக்கிறார்.

---

## இந்திய துணைமந்திரி காலமானுர்

புதுடில்லி, ஜன. 6

இந்திய போக்குவரத்து துணைமந்திரி ஜனுப் அகமது மொயிதீன் இன்று தமது 67-வது வயதில் ஆஸ்பத்திரியில் காலமானுர்.

---

## அப்பீலுக்கு அனுமதி

ஸ்ரீநகர், ஜன. 6

முன்னுள் காஷ்மீர் பிரதமர் பக்ஷி குலாம்முகம்மது மீதான வழக்கில் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்ய அனுமதிக்கப்பட்டிருக்கிறது

---

## படை விலக்கம் பற்றி பேச்சு

அமிர்தசரஸ், ஜன. 6

படை விலக்கம்பற்றி இந்திய-பாகிஸ்தான் ராணுவ பிரதிநிதிகளுக்கிடையே இரண்டாவது சந்திப்பு இன்று இங்கு நடைபெறும்.

---

## சீனு குற்றச்சாட்டு

ஹவானு, ஜன. 6

ரஷ்யா, அமெரிக்காவுடன் சேர்ந்து கூட்டு சதி செய்து வருவதாய் சீனு இங்கு நடைபெறும் முக்கண்ட காலனி எதிர்ப்பு மகாநாட்டில் குற்றஞ்சாட்டியது.

---

## நியுயோர்க் வேலைநிறுத்தம்

நியுயோர்க், ஜன. 6

நியுயோர்க்கில் போக்குவரத்து வேலைநிறுத்தம் இன்னும் முடிவடையவில்லை. மேயர் லிண்ட்சே வேலைநிறுத்தத்தை முடிக்க தீவிர முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சினிமா விமர்சனம்

# இரத்தத் திலகம்

இரத்தத்தால் திலகம் இட்டு, பாரதத் தாயின் புகழை உலகெலாம் பரப்ப 'நடிகர் திலக'த்துக்கு ஆசி கூறுகிறார் 'கவிஞர் திலகம்' கண்ணதாசன்.

இந்திய மண்ணில் பிறந்த ஒவ்வொருவனுக்கும் உணர்ச்சியூட்டக் கூடியவிதத்தில், சீன-இந்திய எல்லைப்போரை வைத்து எடுக்கப்பட்டிருக்கிறது 'இரத்தத் திலகம்.'

கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தவர்கள் சதா சண்டை போட்டுக்கொண்டு பிரியும் சமயத்தில் 'காதல்' என்ற பெரும் பிணைப்பை ஏற்படுத்திக்கொள்கிறார்கள். அவள் சீனாவுக்குச் செல்கிறாள். சென்றவள்.... இந்திய-சீன எல்லைத் தகராறு முற்றியதால், அங்கே ஒரு சீன டாக்டரைத் திருமணம் செய்துகொண்டு, போர் முனையில் சீனப்படையின் நர்ஸாகக் கடமையாற்றுகிறாள். அவன் இந்திய ராணுவத்தில் சேர்ந்துகொண்டு போர் முனையில் வெற்றி தேடிக் கொடுக்கும் வீரனாகப் பவனிவருகிறான். அவள் அவனுக்கு உதவி செய்கிறாள். ஆனால் இருவரும் சந்திப்பதே கிடையாது. அவள் போர் முனையில் தன் உயிரையே அர்ப்பணித்து செய்யும் சாகசச் செயல்கள், ஒன்றா இரண்டா? சீனப்படையிலே இருந்துகொண்டு, தன் தாயகத்துக்காக அவள் செய்யும் தியாகங்கள்— எப்படிச் செய்கிறாள்.... அங்கேதான் 'சஸ்பன்ஸ்.'

''உலக சபையிலே உன்னை 'குளிப்பாட்டி' இருத்துவதற்கு நாம் பட்ட கஷ்டங்கள் கொஞ்சமா?'' என்று சிவாஜி கணேசன் சீனன் முன் பேசும் வசனம் ஐ. நா. சபையிலே சீனாவுக்கும் அங்கத்துவம் வேண்டுமென்று இந்தியா வற்புறுத்திப் பேசியதை நினைவூட்டுகிறது.

நடிகர் திலகமும், நடிகையர் திலகமும் சேர்ந்துகொண்டு 'இரத்தத்திலக'த்துக்கு அழகு கொடுக்கிறார்களென்றால் அது 'சாதாரண திலக'மாக இருக்க முடியுமா?

கல்லூரி விழாவில் நடைபெறும் 'ஒதெல்லோ' நாடகமொன்றில் சிவாஜி கணேசனும், சாவித்திரியும் முழுக்க முழுக்க ஆங்கிலத்திலேயே பேசி நடிப்பதைப் பார்த்தால், 'வெள்ளைக்காரன்' மூக்கிலே கைவைத்தாலும் வைத்துவிடுவான்.

''ஆன்தி மெர்ரி கோரவுண்ட் லெட் அஸ் ரைடு அண்ட் ரோல்'' என்ற ஆங்கிலப் பாட்டை சாவித்திரி பாடிக்கொண்டு கைகோர்த்து ஆடும் அந்த நடனம்.. ஹௌ ருடிஸ்கிறைப் தற்?

''போகாதே போகாதே என் கணவா'' என்று மனோரமா பாட, நாகேஷ் பண்ணும் 'அட்டகாசம்' - வயிறு வலிக்கிறது!

தாதா மிராஸி டைரக்ட் செய்திருக்கிறாரென்றால் அது ஒரு புது வேகத்துடன்தான் ஓடிக்கொண்டிருக்கும் என்று இனி சொல்லியேவிடலாம். 'இரத்தத் திலகம்' அவரை 'டைரக்டர் திலக'மாக்கியே விட்டது!

கவிஞர் கண்ணதாசனின் கருத்து மிக்க பாடல்களை நினைப்பில் நிற்கச் செய்யும் விதத்தில் அருமையாக இசை அமைத்திருக்கிறார் 'திரை இசைத் திலகம்' கே. வி. மகாதேவன்.

பாரதத் தாயின் புகழ் பாடும் 'இரத்தத் திலகம்' தமிழ் அன்னைக்கு ஒரு சமர்ப்பணம்.

யாழ்ப்பாணம் 'ராணி' தியேட்டரில் இப்படம் ஓடிக்கொண்டிருக்கிறது.

--ராஜன்

## சிரமதானம்

வல்வெட்டி, வியா

அல்வாய் சுகாதாரப் பரிசோதகர் திரு. எஸ். சண்முகம்பிள்ளை, அல்வாய் தெற்கு, வடக்கு கிராமசேவகர்கள், இளைஞர்கள் கூட்டாகச் சேர்ந்து அவ்வட்டாரத்தில் அசுத்தங்கள் நிறைந்த அதிகமான கிணறுகளை சிரமதானமூலம் இறைத்தும் கிருமிநாசினி மருந்துதெளித்தும் பாவிப்புக்கு ஏற்றதாக்கிக் கொடுத்துள்ளனர்.

## 19 நாடுகள் கலந்துகொள்ளும்

லாகோஸ், ஜன. 6

ரொடீஷியா பற்றி அடுத்த செவ்வாய்க்கிழமை இங்கு நடைபெறவிருக்கும் காமன்வெல்த் மகாநாட்டில் 19 நாடுகள் கலந்துகொள்ளச் சம்மதம் தெரிவித்திருக்கின்றன.


உறுதியானதும்
நீடித்து உழைப்பதும்
தன்னிகரற்றதுமான

"வைத்திலிங்கம்ஸ்"

இரும்பு - பித்தளை மர ஸ்குறூறு
ஆணிகளை

நீங்கள் வாங்குவதினால்
ஒரு சிறந்த பொருளை வாங்குவதோடு
உள்நாட்டு உற்பத்தியையும் வளர்க்கின்றீர்கள்
என்பதை மறவாதீர்கள்.

தயாரிப்பாளர்கள்:-
என். வைத்திலிங்கம் நிறுவனத்தார்
இரும்பு வியாபாரிகள்
450, பழையசோனக தெரு, கொழும்பு-12
தொலைபேசி: 7143 — 2029

கிளை: 138, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 530


## எதிரிகள் விடுதலை

யாழ்ப்பாணம், வெள்ளி

ரூபா 560 பெறுமதியுள்ள சங்கிலியொன்றை வட்டக்கச்சியைச் சேர்ந்த குஞ்சுப்பிள்ளை என்ற பெண்ணிடமிருந்து கொள்ளையடித்ததாக வட்டக்கச்சியைச்சேர்ந்த தனகோடி, சின்னர்சின்னத்தம்பி ஆகிய இருவர் மீதும் கிளிநொச்சி பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு சாவகச்சேரி மாஜிஸ்திரேட்கோர்ட்டில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது, விசாரணைமுடிவில் மாஜிஸ்திரேட் ருபேர்ட் சில்வா எதிரிகள் இருவரையும்விடுதலைசெய்து தீர்ப்பளித்தார். எதிரிகள் சார்பில் புரக்டர் திரு. ஏ. அன்ரனியும், வழக்காளிகள் சார்பில் புரக்டர் திரு.பாலகிருஷ்ணனும் ஆஜரானார்கள்.

## தமிழரசுக் கட்சி கிளைக் காரியாலயம்

பருத்தித்துறை, வியா.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பருத்தித்துறை கிளைக் காரியாலயம் ஒன்றை வழக்கறிஞர்திரு, எம் நடராசா திறந்து வைத்தார்.

இத்திறப்பு விழாவுக்கு வழக்கறிஞர் திரு. எம். வேலும்மயிலும் தலைமை தாங்கினார். கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேற்பிள்ளை. பருத்தித்துறைஎம். பி. திரு. க. துரைரத்தினம், திரு, கே. ஜெயக்கொடிதிரு, த. இராமநாதபிள்ளை முதலானவேறுபலரும் பேசினர்,

## புதியநிர்வாகிகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

அண்மையில் நடைபெற்ற குருநகர் புனிதவளன் விளையாட்டுக்கழகத்தின் வருடாந்தப்பொதுக் கூட்டத்தில் புதியதலைவராக திரு. அ. யேசுதாசன் தெரிவுசெய்யப்பட்டார். புதிய நிர்வாகிகள் வருமாறு:

கௌரவ காரியதரிசி: திரு மத்தியூஸ், பொருளாளர் திரு ம. அலோசியஸ், விளையாட்டுத்தலைவர்: திரு. ம! தாசிவீயங்சும், உபதலைவர்: திரு. கே.அமலசீலம், உபசெயலாளரும், உபதனாதிகாரியும்: திரு. ஈ. அன்ரனி.

மேற்படி கூட்டத்திற்கு பிரதம விருந்தினராக வண. பிதா ஏ. சாவேற், திரு.பி. பாக்கியநாதர், இராசநாயகம், தம்பையா, எம். விக்டர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## விளையாட்டுச்சங்க புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். மாவட்ட 'பாட்மின்டன்' விளையாட்டுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும், புதிய நிர்வாக சபைத்தெரிவும் யாழ். வை. எம். சி. ஏ. மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது,

புதிய நிர்வாகசபைத்தெரிவில் பிரதம போஷகராக யாழ்ப்பாணம்மேயர் தெரிவு செய்யப்பட்டார். உப போஷகராக திரு. ரி. நீதிராசா ஜே. பி. யும் சுண்டிக்குளி மகளிர்கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, சென். ஜோன்ஸ் கல்லூரி, ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆகியவற்றின் அதிபர்களும் தெரிவு செய்யப்பட்டனர். தலைவராக ஆர். பி. நடராசாவும், உபதலைவர்களாக செல்வி. பி. துரைசிங்கமும், சி. ஏ. டபிள்யு. செல்வரத்தினம், ரி. ரத்தினசுந்தரம், ரி. ஆலாலசுந்தரம் ஆகியோரும் கௌரவசெயலாளராக லெக்ஸ் தம்பிராஜாவும் தனாதிகாரியாகஜி. ஏ. சத்தியநாதனும், உபதனாதிகாரி, உபசெயலாளராக டி. எம். சோமசுந்தரமும் தெரிவு செய்யப்பட்டனர்.

# "தமிழன் சுதந்திரமாக வாழ வழிவகுக்க வேண்டும்"

### பாராட்டுக் கூட்டத்தில்

## ஜி.ஜி.க்கு உடுப்பிட்டி எம். பி. கோரிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி

'சரித்திர காலம் தொட்டு தமிழ் மக்கள் உலகின் பல பாகங்களுக்கும் சென்று தமிழனின் புகழை நிலைநாட்டினார்கள். சில நூற்றாண்டுகளாக அப்புகழ் மங்கிக்கிடந்தது. ஒவ்வொரு நாட்டிலும் தமிழ் மக்கள் அடங்கி ஒடுங்கிக்கிடந்தனர். மீண்டும் தமிழனின் புகழை உலக அவையில் தெரிவித்த தலைவர் திரு. பொன்னம்பலமாகும்.'

திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்திற்கு யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் நடைபெற்ற வரவேற்புக் கூட்டத்தில் உடுப்பிட்டி எம். பி திரு.எம். சிவசிதம்பரம் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. சிவசிதம்பரம் மேலும் கூறியதாவது:-

1947-ம் ஆண்டு உலகயுத்தம் உச்சக்கட்டத்தில் இருந்த சமயம் கடல் நிலைமை அபாயமாக இருந்தபோது, இங்கிலாந்து சென்று சேனநாயக்கா போன்ற சிங்களத் தலைவர்களின் எண்ணத்திற்கு மாறாக சோல்பரி கமிஷனை இலங்கைக்குக் கொண்டுவந்த புகழ் திரு. பொன்னம்பலத்தையே சாரும்.

திரு பொன்னம்பலத்தின் ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கையை சோல்பரி கமிஷன் ஏற்றுக்கொள்ளாவிடினும், தமிழ்க்காங்கிரஸின் கோரிக்கையான சிறுபான்மை மக்களுக்குப் பாதுகாப்பளிக்கும் 29-வது ஷரத்தைச் சேர்க்க சம்மதித்தது. அந்த 29-வது ஷரத்தினால்தான் இன்றுசிறுபான்மை மக்கள் பாதுகாப்புடன் இருக்கின்றார்கள். சதி வழக்கில் பிரிவிக்கவுன்சிலின் தீர்ப்பும் இந்த 29-வது ஷரத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது சிறுபான்மை மக்களுக்கு மாறாக அதை மாற்றியமைக்கமுடியாது எனவும் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. 65-ம் வருடம் இலங்கை அரசாங்கத்தின் தூதுகோஷ்டியாகச் சென்று ஐக்கிய நாடுகள் சபையில், செஞ்சீனாவை ஐக்கிய நாடுகள் சபையில் சேர்க்கத் திருத்தப்பிரேரணைகொண்டு வந்து கூடுதலான வாக்குப் பெற முயற்சி எடுத்தவர் திரு. பொன்னம்பலம்.

உலகத்தின் சமாதான குழுத் தலைவராக, ரஷ்ய, அமெரிக்க அயர்லந்து மக்களைக்கொண்ட சபையின் தலைவராக இருந்தபெருமை திரு. பொன்னம்பலத்திற்கு மட்டுமல்லதமிழினத்திற்கே உரியது. தமிழ்மக்களை மீண்டும் சுதந்திரமாகவும், சுயமரியாதையாகவும் தன்மானத்துடனும் வாழ வழி வகுத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

வவனியா, எம். பி. திரு. ரி. சிவசிதம்பரம் பேசும்போது கூறியதாவது:

தமிழ்பேசும் இனம், ஒரு சில ஆண்டுகாலமாக உரிமைகளை ஒவ்வொன்றாக இழந்துவருகின்றது உரிமைகள் பறிக்கப்பட்டு அனாதைகளாகவிடப்பட்ட நேரத்தில், நமது தலைவர் மீண்டும் பாராளுமன்றம் சென்றுள்ளதால், எங்கள் நம்பிக்கையில் தெளிவேற்படுகிறது. தமிழன் வாழையடி வாழையாக இங்கு வாழ்ந்தவன். ஆதலால் நாடு முழுவதும் தமிழுக்கும் உரிய இடம் கிடைப்பதற்கான வழிசெய்யவேண்டும்.

முதலியார் முத்துத்தம்பி பேசும்போது கூறியதாவது:

தமிழையும் சைவத்தையும் வளர்த்த ஆறுமுக நாவலரைபல்லக்கில் தூக்கி பாராட்டினார்கள். சேர். பி. இராமநாதனை சிங்கள மக்கள் கூடவணங்கி கௌரவித்தார்கள். சேர். பி. இராமநாதனுக்குப்பின் அவரின் வழியைப் பின்பற்றி, நாட்டின் ஐக்கியத்திற்காகவும், தமிழனின் பெருமைக்காகவும் கடந்த 30 வருடகாலமாக உழைத்த திரு. பொன்னம்பலத்தை இன்று தமிழ்மக்கள் தேரில்வைத்து ஊர்வலமாக அழைத்துச் சென்று கௌரவித்துள்ளார்கள். சிங்களமக்களுக்கு உள்ள உரிமை தமிழ்மக்களுக்கும் இந்நாடுமுழுவதும் கிடைக்கவேண்டும்.

தமிழ்க்காங்கிரஸ் வாலிப முன்னணி செயலாளர் திரு. எஸ். சிறீதரன் பேசும்போது, திரு. பொன்னம்பலம் செய்த சேவையைப் பாராட்டிப் பேசினார்.

# சேர் பொன். அருணாசலம் நினைவு தினக் கொண்டாட்டம்

## தமிழ் ஊழியர் சங்கம் ஏற்பாடு

பம்பலப்பிட்டி, வியா.

மத்தியவங்கி தமிழ்ஊழியர் சங்கம் சேர் பொன். அருணாசலம்நினைவுவிழாவையொட்டி மொழிவழி இயங்கும் சகல தொழிற்சங்கங்களுக்கும் பின்வரும் செய்தியை அனுப்பிவைத்துள்ளது.

'ஈழம் உள்ளவும் மக்கள் உள்ளத்தில் சேர் பொன் அருணாசலம் நிலைத்து நிற்பாரென பிரதமர் திரு. டட்லி சேனநாயகா வாழ்த்துரை வழங்கியதற்கமைய ஈழத்தின் விடுதலைஇயக்கம், பல்கலைக்கழக இயக்கம், இலவசக் கல்வி இயக்கம் ஆகிய அனைத்துக்கும் வழிகோலிநிலைத்த நற்பணியாற்றிய பெருமை சேர் பொன். அருணாசலத்துக்கு உரியது. தொழிற்சங்கங்களில் ஈடுபட்டு பணியாற்றிவரும் நாம் அவர் ஆற்றிய மற்றொரு முக்கிய பணியையும் நினைவில் வைத்து அஞ்சலி செலுத்த விரும்புகின்றோம். ஈழத்தில் தொழிற்சங்கங்களுக்கு தந்தையாக விளங்கும் சேர் பொன். இலங்கை தொழிலாளர் நலன் கருதி குறிப்பாக மலைநாட்டுத் தமிழர் நலன் கருதி செய்தசேவை அளப்பரியது, அவரது பணியைப்பாராட்டி 14-7-1921-ல் கேர்ணல் வெஜ்வுட் பிரிட்டிஷ் பார்லிமெண்டில்வழங்கிய பாராட்டுரை நமது உள்ளத்தில் என்றும் நிலைத்துநிற்கக்கூடியது.'

மேற்படி மத்தியவங்கி ஊழியர்சங்கம் வரும் ஞாயிற்றுக்கிழமை பாராளுமன்ற முன்றலில் நடத்தவிருக்கும் சேர் பொன். அருணாசலம் ஞாபகார்த்தக் கூட்டத்தில் மொழிவழி இயங்கும் சகல தொழிற்சங்கங்களையும் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுத்துள்ளது.

இக்கூட்டத்தில் பிரதமர் திரு. டட்லிசேனநாயகா மற்றும் பிரமுகர்கள் ஆகியோர் கலந்துகொள்வார்களென அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### லொறிமூலம் சீமெந்து ஏற்றிச் செல்வதற்கான கேள்விப் பத்திர கள்

காங்கேசன்துறை காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலையிலிருந்து அநுராதபுரம் சீமெந்து விற்பனவு நிலயத்திற்கு லொறிகள் மூலம் சீமெந்து ஏற்றிச்செல்வதற்கானகேள்விப்பத்திரங்கள் வரவேற்கப்படும் முடிவு 66-ம் ஆண்டு தை மாதம் 17-ம் திகதி பி. ப. 12 மணிவரை இதர விபரங்கட்குக் கீழ்க்காணும் விலாசதாருடன் தொடர்புகொள்க.

விற்பனவு அதிபர்,
காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை.

காங்கேசன்துறை,
4-1-66. 1532

REGAL—JAFFNA
NOW SHOWING
CHARLTON HESTON
SOPHIA LOREN
in
EL CID
(Super Technirama-Technicolor)

நியூ
காலிங்கன் சினிமா
(இணுவில்)
எம். ஜி. ஆர் - சரோஜாதேவி
நடித்த
பணக்காரக் குடும்பம்

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-சரோஜாதேவி
நடித்த
பெரியஇடத்துப்பெண்


# விளையாட்டுப் பகுதி

## மாநகர சபையே வென்றதாக அறிவிப்பு

யாழ்ப்பாணம், திங்கள் யாழ். மாவட்ட விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் அரசாங்க பகுதிகளுக்கிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப்போட்டியில் கலந்துகொண்டு இறுதி முடிவு காணுத நிலையில் முடிவடைந்த கல்விப்பகுதி மாநகர சபை உதைபந்தாட்டப் போட்டியில் மாநகரசபைக் கோஷ்டியே வெற்றிபெற்றதென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி போட்டியின் முடிவைத் தீர்மானிக்கும் பொருட்டு யாழ். விளையாட்டுச் சங்கத்தின் நிர்வாக சபை அண்மையில்கூடி இது பற்றி ஆலோசனை செய்தது இறுதியில் யாழ். மாநகர சபை கோஷ்டியே வெற்றி பெற்றதென ஏகமனதாக முடிவுசெய்யப்பட்டது.

திருஞானசுந்தரத்தின் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

அடுத்து நடைபெறவிருக்கும் சாம்பியன் போட்டி யாழ். தபால் ஊழியர் கோஷ்டிக்கும் யாழ். மாநகர சபைக் கோஷ்டிக்குமிடையே நடைபெறும் என்று சபை அறிவித்தது.

## யாழ். கோஷ்டி வெற்றி

யாழ்ப்பாணம், வெள்ளி யாழ். உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும் நாவாந்துறை சென். மேரிஸ் உதைபந்தாட்டக் கோட்டிக்குமிடையே நடைபெற்ற சிநேகித பூர்வமான உதைபந்தாட்டப்போட்டியில் யாழ். உதைபந்தாட்டக்கோஷ்டிவெற்றியீட்டியது. போட்டி ஆரம்பத்தில் இருந்து முடியும் வரை விறுவிறுப்பாகவும் பாராட்டக்கூடியதாகவும் இரு கோஷ்டிகளும் மோதிக் கொண்டன.

இடைவேளைக்கு முன் நடந்த போட்டியில் சென். மேரிஸ் கோஷ்டியின் முன்னணி வீரரான தோ. மரியதாஸ் எதிர்பாராத விதமாக மின்னல் வேகத்தில் முதலாவது கோலைப்போட்டார்.

யாழ். கோஷ்டியின் முன்னணி வீரர்கள் பலமுறை முயன்றும் கோல்கள் போடத்தவறவிட்டது குறிப்பிடத்தக்கது. இடைவேளைக்குப்பின்பு நடந்தபோட்டியில் யாழ். கோஷ்டியில் ஒரு புது உற்சாகம் காணப்பட்டது. அடுத்தடுத்து மூன்று கோல்களை வெளுத்து வாங்கினார்கள். முதல் இரண்டு கோல்களையும் கணேசானந்தனும் மூன்ருவதுகோலை திருஞானசம்பந்தனும் முறையே போட்டனர். இக்கோஷ்டியில் சண்முகலிங்கம் தேவராசா, சூசைப்பிள்ளை,

(6-ம் பக்கம் பார்க்க)




வெற்றிகரமான 2வது வாரம்!
வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30.
விடுமுறை நாட்களில் காலை 10 மணிக்கு
வீரக்காவியத்தின் விடிவிளக்கு
வெற்றித் தமிழகத்தின் பேசும் பெண் தெய்வம்
கற்புக்கரசி கண்ணகியின் வரலாறு!
மேகலா பிக்சர்ஸ அளிக்கும்
கருணநிதியின்
பூம்புகார்
எஸ். எஸ். ஆர். — விஜயகுமாரி
கே. பி. சுந்தராம்பாள்,
ராஜ்ஸ்ரீ, நாகேஷ் - மனேரமா, ஓ. ஏ. கே. தேவர்
மற்றும் பலர் நடித்து!
அனேகரின் பாராட்டுதலைப்பெற்ற திரை ஓவியம்.
டைரக்ஷன் — நீலகண்டன்
கதைவசனம் — மு. கருணநிதி.
இசை — சுதர்சனம்.

### விற்பனைக்கு

பொங்கல் வாழ்த்துக்கள் ஏராளமான சைஸ்களில் குறைந்த விலைகளில் வேகமாக விற்பனையாகிறது. வியாபாரிகளுக்கு கழிவு உண்டு. உடனே உங்கள் தேவைகளுக்கு எழுதுங்கள். தமிழ்ப்பண்ணை, 193, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். 1679

வீடு ஓடுகள், யன்னல்கள், மரங்கள், கதவுகள் உட்பட விற்பனைக்குண்டு. ஆர். சிறிதாஸ், 'ஆனந்த லோஜ்', தெற்கு மானிப்பாய். 1700

### தேவை

புல்டோசர், டிராக்டர், சாமான் ஏற்றும் வாகனங்களுக்கு மெக்கானிக்குகளும் சுப்பவைசர்களும் தேவை. ரொக்கப்பிணை கட்ட வேண்டும். விண்ணப்பிக்கவும்: ஜி; ஜனர்த்தனன், 133, மீத் தோட்டமுல்ல ரோட், வெல்லம்பிட்டியா, கொலன்னுவ. 1691

கொழும்பில் ஒப்பந்தஅடிப்படையில் வேலைசெய்வதற்கு புல்டோசர் சாரதிகள் தேவை. ரொக்கப்பிணை கட்டவேண்டும். விண்ணப்பிக்கவும்: ஜி. ஜனர்த்தனன், 133, மீத் தோட்டமுல்ல ரோட், வெல்லம்பிட்டிய, கொலன்னுவ. 1692

கொழும்பில் மண் ஏற்றி இறக்குவதற்கு ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்வதற்கு விவசாய டிராக்டர் சாரதிகள் தேவை. விண்ணப்பதாரர், லொறி, பாரமான வாகனங்கள் ஓட்டுவதற்கான லைசென்ஸ் வைத்திருக்கவேண்டும். ரொக்கப்பிணை கட்டத் தயாராக இருக்கவேண்டும். விண்ணப்பிக்கவும்; ஜி. ஜனர்த்தனன், 133, மீத் தோட்டமுல்ல ரோட், வெல்லம்பிட்டியா, கொலன்னுவ. 1693

## வரி விளம்பரம்

### கல்வி

இந்த மாதத்தில் எங்கள் ஜி. சி. ஈ. சாதாரணம் கலை/விஞ்ஞானம்/வர்த்தகம், உயர்தரம்கலை/விஞ்ஞானம், ஜி. சி. ஈ. முதல்வருட விஞ்ஞான வகுப்புகளில் சேரும் பதினெட்டுமாணவர்களுக்கு இலவசக்கல்வி அளிக்கப்படும். தங்க வசதியுண்டு. யுனைட்டட் இன்ஸ்ரிரியூற்ஸ், நெல்லியடி, கரவெட்டி/107, பருத்தித்துறை ரோட், நல்லூர், யாழ்ப்பாணம். 1672

1966-ம் ஆண்டுப் பாடப் புத்தகங்கள் தெரிவுசெய்யும் பொழுது சிவக்கொழுந்து கணிதங்கள்—மனக்கணிதங்கள்—சூழல்— அக்ஷர கேத்திர கணிதங்கள் மிகவும் ஏற்றவை. மாணவர் ஏமாற மாட்டார்கள். பாடத்திட்டம் வருட முடிவுற்குள் நிறைவெய்தும் என்பதற்கு உத்தரவாதம். விலைப்பட்டியலுக்கெழுதுக. கலாபவனம், வியாபாரிமூலை, பருத்தித்துறை. 1653

கலை, விஞ்ஞானம், வர்த்தகம் (தமிழ்/ஆங்கிலம்) சிங்களம், தையல் க. பொ. த. ப. (சாதாரணம்/உயர்தரம்) வகுப்புகள் நடைபெறுகின்றன. 1965 ஆவணிப் பரீட்சையில் விசேட, திறமையான சித்திகளுட்பட 100% சித்தியடைந்திருக்கிருர்கள். நிர்வாகம், கல்வித் திறமை, ஸ்தாபிதம் என்பவற்றை ஆராய்ந்தே சேருங்கள். விடுதி வசதி உண்டு. வர்த்தகக் கல்லூரி, (ஸ்தாபிதம் 1924) பருத்தித்துறை 1697

ஜி. ஏ. கியூ., ஜி. சி. ஈ., உயர்தர வகுப்புக்கள் நடைபெறுகின்றன. சேருங்கள். யாழ்ப்பாண டியூட்டோறியல் கல்லூரி, நல்லூர், யாழ்ப்பாணம். 1707

பாடசாலை செல்லும் மாணவர்களின் வசதிக்கேற்ப ஜி. சி. ஈ. சாதாரணம் கலை/விஞ்ஞானம்/வர்த்தகம், உயர்தரம் கலை/விஞ்ஞானம், ஜி. சி. ஈ. விஞ்ஞான முதல்வருடம், ஜே. எஸ். சி., 7-ம், 6-ம் வகுப்புகள், சிங்கள வகுப்புகள் மாலையில் நடத்தப்படுகின்றன. விளையாட்டுப் போட்டியைப்பற்றிய விபரங்களை யுனைட்டெட் இன்ஸ்ரிரியூட்ஸ், நெல்லியடி, கரவெட்டி / 107, பருத்தித்துறை ரோட், நல்லூர், யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் அறிந்துகொள்ளலாம். 1703

வவுனியா, மன்னர், திருக்கோணமலை, கல்முனை, புத்தளம், கிளிநொச்சி ஆகிய இடங்களில் விரைவில் திறக்கப்படவிருக்கும் எங்களது கிளைக்கல்லூரிகளில் நடைபெறும் வகுப்புக்களான ஜி. ஸி. ஈ. (சாதாரணம்) கலை / விஞ்ஞானம் / வர்த்தகம்; ஜி. ஸி. ஈ. உயர்தரம்) கலை / விஞ்ஞானம், விஞ்ஞான ஆரம்பவகுப்பு, ஜி. ஏ. கியூ. ஆகியவற்றுக்கான பிரவேச அனுமதிகள் இப்பொழுதே ஏற்றுக்கொள்ளப்படும். ஆண்/பெண்களுக்கான பேச்சுப் போட்டிகளும் நடைபெறும். தொடர்புகொள்க: யுனைட்டெட் இன்ஸ்ரிரியூட்ஸ், நெல்லியடி கரவெட்டி. 1705

க. பொ. த. வர்த்தகம், விஞ்ஞானம், கலை பாட வகுப்புகளுக்கும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. வகுப்பு ஆரம்பம் 8-1-66. உடன் விண்ணப்பிக்கவும். வர்த்தக கல்வி நிலையம் திருநெல்வேலி, யாழ்ப்பாணம். 1711

இன்சூரன்ஸ், கணக்கியல், விளம்பரம், பைனன்ஸ், சொத்துக்கள் ஆகியவைபற்றிய சகலவித ஆலோசனைகளுக்கும் தொடர்புகொள்ளுங்கள்: யுனைட்டெட் சேர்விஸஸ், நெல்லியடி, கரவெட்டி /107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்: 1704

இன்சூரன்ஸ் சேவையில் ஒருவிசேஷவாய்ப்பு. தவணைமுறைகளில் மோட்டார், தீவிபத்து இன்சூரன்ஸ் செலுத்தலாம். விபரங்களுக்கு: யுனைட்டெட் சேர்விஸஸ், நெல்லியடி, கரவெட்டி. 1706

### தேவை

கட்டுப் பணத்திற்கு ஏஜன்டுகள் மூலம் தளபாடங்களை விநியோகம் செய்வதற்கு வட மாகாணத்திற்கு உட்பட்ட பட்டினங்களில் இருந்து ஏஜன்டுகள் தேவை. பட்டின ஏஜன்டுகளாக விண்ணப்பம் பெறுபவர் பிணைப் பணம் கட்ட தகுதிஉடையவராகவும் உடமைப் பிணை செலுத்தக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும். தராதரம் G. C. E. இருத்தல் வேண்டும். எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும் விளம்பர இல. 1670 ஈழநாடு மேற்பார்த்து. 1670

ஊரியான் ப. நோ. கூ. சங்க பண்டகசாலைக்கு ஒரு மனேச்சர் தேவை. தராதரம்: கனிஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி அடைந்தவராகவும், கூட்டுறவுப் பயிற்சி பெற்றவராகவும்இருக்கவேண்டும். வயது: 30-க்கு மேல். பிணை: உரொக்கப்பிணை 1000/-. உறுதிப் பிணை 2000/-. வேதனம்: மாதம் ரூபா 90/-. சுத்த இலாபத்தில் 5% 'கொமிசன் வழங்கப்படும். முன் அனுபவம் உள்ளவருக்கு விசேட சலுகைகள் உண்டு. விண்ணப்பங்கள் யாவும் 17-1-66 காலை 10 மணிக்கு முன் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால்மூலம் அனுப்பப்படல்வேண்டும். க. விசுவலிங்கம், கௌரவ காரியதரிசி, ஊரியான் ப. நோ. கூ. சங்கம், பரந்தன் 6-1-66 1712

விற்பனையாளர் தேவை. வயது 21—40. தராதரம் எட்டாம் வகுப்பு (தமிழ் அல்லது ஆங்கிலம்) கூட்டுறவுப் பயிற்சி குறைந்தது இரண்டுமாதம் சித்தியடைந்திருத்தல்வேண்டும். பிணை 250/- சம்பளம் மொத்தமாக 90/- விண்ணப்பிப்போர் காரியதரிசிக்கு 20-1-66 முன் விண்ணப்பிக்கவும். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், ஆவரங்கால், புத்தூர் க. அம்பலவாணர், காரியதரிசி. 1698

### விற்பனைக்கு

4'×2' நீள அகலமுள்ள மரம் அரியும் வாள் பட்டையும் 10 கோஸ் (கிஸ்) மோட்டரும் 20'' நீளமுள்ள 2'' சாவட்டும் புள்ளிகளும் தனித்தும் ஒருமித்தும். நேரில் பார்வையிடவும். வேலழகன் தொழிற்சாலை, சுன்னுகம். 1682

### பிரபல சோதிடம்

சாதக பலன் ரூபா 3-00, ரேகை பலன் ரூபா 2-00, ஆரூட பலன் ரூபா 1-00. S. சிவகுருநாதன், 160, அரசடி ரோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். 1702

Seat of Learning Uduvil Re-Opens January 7th G.C.E. O. L. August and December Evening Classes. Apply Immediately. 1701


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று இறுதி முடிவு

யாழ்ப்பாணம், வெள்ளி

அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் கமிட்டி கூட்டம், யாழ்ப்பாணத்திலுள்ள தலைமைக் காரியாலயத்தில் நேற்றுக் காலை நடைபெற்றபோது தமிழ்மொழி உபயோக மசோதா பற்றி சுமார் 3 மணித்தியாலங்கள் ஆராயப்பட்டது.

தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில், இம் மசோதா பற்றி அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் கருத்தை தெரிவித்தனர்.

இவ் விஷயமாக இறுதி முடிவை இன்று மாலை திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம், திரு. வவனியா எம். பி. ரி. சிவசிதம்பரம் ஆகியோர் கொழும்பில் கூடி முடிவு செய்வார்கள்.

## லட்சதீவில் புயல்

புதுடில்லி, ஜன. 6

லட்சதீவில் ஏற்பட்ட புயல் காரணமாக 8 பேர் மாண்டனர். 20 பேரைக் காணவில்லை. சொத்துக்களுக்குப் பெருஞ்சேதம் ஏற்பட்டிருக்கிறது.


## காணவில்லை

6-1-66 பிற்பகல் 2-30 மணியளவில் வின்ஸர் படமாளிகைக்கு அருகாமையில் ஒரு ''வைலர்'' லேடீஸ் கைக்கடிகாரம் (அதன் பட்டி தங்கத்தாலானது) காணமற் போய்விட்டது. தயவுசெய்து அதை கண்டெடுத்தவர்கள் ஈழநாடு காரியாலயத்தில் சேர்ப்பிக்கவும். சன்மானம் அளிக்கப்படும். 1715

## மனேஜர் தேவை

உடனடியாக நியமனம் பெறக்கூடியவரும் பிணைப்பணம் கட்டக்கூடியவரும் எழுத்துமூலம் நற்சாட்சிப் பத்திரங்களுடன் 15-1-1966-க்கு முன்னர் விண்ணப்பிக்கவும். உரிமையாளர், பாரதி புத்தகசாலை, ராஜா பில்டிங்ஸ், 160, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 1714


## தமிழ்மொழி உபயோக . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பேர்மட்டும்தான் இருக்கிறோம். சமஷ்டிக்கட்சி சார்பில் 15 பேர் இருக்கிறார்கள். அவர்களை மிகவும் தாழ்மையாக தலைசரிந்து பணிவாகக் கேட்டுக் கொள்கிறேன், தயவுசெய்து தமிழினத்தை இரையாக்காதீர்கள். தேசிய அரசாங்கத்தின் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா, முழுஇலங்கையிலும் தமிழுக்கு உரிமை தருவதாகக் கூறியதைத் தடுத்து அற்ப சொற்ப சலுகைகளை, வடக்கு கிழக்கில் மட்டும் தமிழிலும் நிர்வாகம் நடத்தும் முடிவை, கடைசி முடிவாக, இறுதி முடிவாக ஏற்றுக்கொள்ளவேண்டாம், எங்கள்கட்சி முழு இலங்கையிலும் தமிழுக்கும் சிங்களத்துடன் சமஅந்தஸ்து கோருகிறதென்பதற்காக, அதிலும் பார்க்ககுறைந்தசலுகைஅற்பசொற்பசலுகைகளை, கட்சி வளர்ச்சிக்காக ஏற்று, தமிழினத்தைப் பலியாக்கவேண்டாம். ஏழுமாகாணங்களிலுமுள்ள தமிழ் மக்களின் உரிமைகளைப் பறிகொடுத்தால் எதிர்காலத்தில், வடக்கு கிழக்கு மாகாணங்களிலும் அந்தநிலை ஏற்படலாம்.

சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க, திட்டம், தீர்மானம், ஐக்கிய நாடு சபையிலும் பேசப்பட்டிருக்கிறது. சென்ற அரசாங்கம் சதிசெய்ததாகச்சிலரைப்பிடித்து சட்டங்களை மாற்றி இல்லாத குற்றங்களைச்சுமத்தி பாராளுமன்றத்தில் திட்டங்களை வகுத்து 3 நீதியரசர் குழுவை நியமித்தார்கள். அது பிழைஎன்று வாதாடி ஏற்றுக்கொள்ளச்செய்தது நாங்கள்தான். இதேபோல் மற்ற நீதியரசர் குழுவையும் பிழை என்று ஏற்றுக் கொள்ளச்செய்தோம். அரசாங்கத்தின் தீர்மானம் பிழை என்று தீர்ப்புக் கூறப்பட்டது. சிறுபான்மை இனத்தைநினைத்தபடி ஆட்டுவதற்கு இனிமேல் சர்வ உலகமும்இடங்கொடுக்காது.

### குறைந்த சலுகைகளை எதிர்க்கின்றனர்

தமிழ்க்காங்கிரசை பொறுத்தவரையில் இது ஒரு வில்லங்கமான தர்ம சங்கடமான நேரம். வடக்கு கிழக்கில் தமிழையும் நிர்வாக மொழியாக்கும் தமிழ்மொழி உபயோக மசோதாவை எதிர்த்தால் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்காவது கிடைக்கும் சொற்ப சலுகைகளை எதிர்க்கும் துரோகிகள் என்று எங்களை வசைபாடுவார்கள். இந்த வார்த்தைகளைக்கேட்டுக்கேட்டுசலித்துப் போனதால், அதற்கு நாங்கள் பயப்படவில்லை. ஆனால் இந்தநேரத்தில் நாங்கள்மற்றொரு விஷயத்தைக் கவனிக்கவேண்டும். எதிர்க்கட்சிகளானசிறிலங்கா சுதந்திரக்கட்சி, சமசமாசக் கட்சி, கம்யூனிஸ்ட்கட்சி ஆகியவை தமிழினத்திற்கு. அற்ப சொற்ப சலுகைகளும் கொடுக்கக்கூடாதென தீர்மானித்துள்ளது. திருமதி சிறிமா பண்டாரநாயக்கா ஆட்சிபுரிந்த காலத்தில், சிம்மாசனப்பிரசங்கத்தில், இதேமாதிரி தமிழ்மொழி உபயோகவிதிகள் கொண்டு வருவோம் என்று 3 முறை சிம்மாசனப்பிரசங்கத்தில் கூறினார்கள். அப்படி கூறியவர்கள் இன்று தேசிய அரசாங்கம் பண்டாரநாயக்கா கூறியவற்றிலும் பார்க்க குறைந்த சலுகைகள் கொடுக்க முன்வரும் பொழுது, அந்த அற்ப சொற்ப சலுகைகளையும் எதிர்க்கிறார்கள். தமிழ்சாதியை இந்நாட்டில் அடிமை இனமாக இரண்டாம் இனமாக மதிக்கும் எதிர்க்கட்சிகளை நம்பமுடியுமா? நாங்கள் தேசியஅரசாங்கத்தை விட்டுவெளியேறினால் வேறு எந்தக்கட்சியுடன்சேருவது? தமிழ்மக்களின் உரிமைகளை இந்த அரசாங்கத்தின் மூலமே பெறமுடியும்.

### மசோதாவை ஆதரிப்போம்

நமக்கு கிடைக்கும் அற்ப சொற்ப சலுகைகளையும், எதிர்ப்பதனால், தமிழினத்தின் ஒற்றுமையை காட்டுவதற்காக, நாங்கள் தமிழ்மொழி உபயோக மசோதாவைஆதரிப்போம். தமிழ் மக்கள் ஒற்றுமைப்படவேண்டும். ஒற்றுமை வருவதற்காக, சமஷ்டிக்கட்சியினர் கேட்ட சலுகைகளை நான் சம்மதிக்கிறேன். பின்வரும் காலத்தில்முழு இலங்கையிலும் தமிழுக்கும் உரிமைபெற்று சமனாக இருந்துவாழ, பிரதமமந்திரி ஐக்கியதேசியகட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வெளியிட்ட வாக்குறுதியை கேட்டால் செய்வாராஎன்று சிந்திக்கவேண்டும்.

### வட்டமேசை மகாநாடு

தேர்தல் காலத்தில் வட்டமேசை மகாநாடு பற்றி கூறினேன். இச்சமயத்தில் மீண்டும் ஞாபகமூட்டுகிறேன். தமிழர்களுக்கு கிடைக்கும் அற்பசொற்ப சலுகைகளை அடுத்த தடவை 5 வருடத்தில் பின் சுதந்திரக்கட்சியோ அல்லது இடதுசாரிக்கட்சியோ பதவிக்குவந்தால், இந்த சலுகைளும் பறிக்கப்பட்டுவிடலாம் இப்பொழுது கிடைக்கவிருக்கும் அற்ப சொற்ப சலுகைகளைக்கூட, சர்வ கட்சிகளைக் கொண்ட வட்டமேசைமகாநாட்டில் பெற்றால், அதனை, அந்த உரிமைகளை, எந்தக்கட்சி அடுத்த முறை ஆட்சிக்குவந்தாலும் பறிக்காது. இப்பிரச்னையை வைத்து எந்தக்கட்சியும் தேர்தல் காலத்திலும் பிரசாரம் செய்யாது. வட்டமேசைமகாநாட்டில் பெறும் உரிமைகள் நிரந்தரமாகிவிடும்.

தமிழ்மொழி உபயோக மொழி மசோதா விதிகளை நன்குபடித்து ஆலோசித்தபின்தான், அதைப்பற்றி விபரமாகக் கூறமுடியும், தனிச்சிங்களத்தை தமிழ் இனம் ஏற்கமாட்டாதென தேர்தல்காலத்தில் கூறினேன். அதையே இப்பொழுது மீண்டும் கூறுகிறேன். தமிழ்பேசும்பிரதிநிதிகள் எல்லோரும் ஒற்றுமைப்பட்டால், இலங்கை முழுவதும் தமிழுக்குஉரிமை பெறமுடியும்.

இச்சமயத்தில்மேடைக்கு முன்னால் இருந்த ஒருவர் 8-ந் திகதி தமிழ்மொழி சட்டத்தை 3 பேரும் ஆதரிப்பீர்களா? என்று கேட்ட போது திரு. பொன்னம்பலம், சட்டவிதிகளை நன்கு படித்து, அதனால் வரும் நன்மை தீமைகளை ஆராய்ந்து, ஆலோசனைசெய்து முடிவுசெய்வோமென்றார்.

திரு. சி. செல்லத்துரை வாழ்த்துப்பா பாடி வழங்கினார். யாழ்ப்பாணம் துறைமுகத் தொழிலாளரும் வாழ்த்துப்பாபாடி வழங்கினார்கள்.

## யாழ். கோஷ்டி . . .

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியோரின் விளையாட்டு பாராட்டத்தக்கது.

சென். மேரிஸ் கோஷ்டியில் ம. செ. மைக்கல்தாசன் ம. டானீசியஸ், ச. அ. அன்ரனி ஆகியோரின் விளையாட்டு நன்றாக இருந்தது. இப்போட்டி முடிவில் யாழ். கோஷ்டி சென். மேரிஸ் கோஷ்டியை 3—1 கோல்களால் தோற்கடித்தது. மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு ஏ. சுப்பிரமணியம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.


# ஈழநாடு தினக்குறிப்பு 1966

### வாங்கிவிட்டீர்களா?

இன்றேல்

உடனடியாக வாங்கிப் பயனடையுங்கள்

புதிய விடுமுறை தினங்கள், அரசாங்க அலுவல்கள், மந்திரிகள், எம். பி. க்கள், செனட்டர்கள் பற்றிய விபரங்கள், தபால், தந்திக்கட்டணங்கள், உள்நாடு, வெளிநாடு சம்பந்தமான பொது விஷயங்கள், முக்கிய சரித்திர சம்பவங்கள்

அனைத்தும் அடங்கியது

கைக்கடக்கமான 6'' × 4'' அளவில்

எங்கும் கிடைக்கும்

**விலை ரூ. 2-00**

ஈழநாடு லிமிட்டெட்,

63, சிவன் கோவில் மேலை வீதி, யாழ்ப்பாணம்.

போன்: 389


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி; 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஜனவரி மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## தமிழ் சட்டவிதிகளை ஒத்திவைக்க கே. எம். பி. கடிதம்

பம்பலப்பிட்டி, வியா

தமிழ்மொழி (விசேஷ) மசோதாவைப் பார்லிமெண்டில் சமர்ப்பிப்பதை ஒத்திவைக்குமாறு பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காவை ஜாதிக விமுக்தி பெரமுனையின் தலைவர் திரு. கே. எம். பி. ராஜரத்ன கோரியுள்ளார்.

இதுசம்பந்தமாக திரு. கே. எம். பி. ராஜரத்ன, பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காவுக்குக் கடிதம் ஒன்று அனுப்பியுள்ளார்.

இப்படியான மசோதாவைப் பார்லிமெண்டில் சமர்ப்பிக்கு முன்னர் மகா சங்கத்துடன் ஆலோசனை நடத்தவேண்டும் என்றும் அத்துடன் மதத் தலைவர்களுடனும், தேசிய ஸ்தாபனங்களுடனும் கலந்தாலோசிக்கவேண்டுமென்றும் திரு. ராஜரத்ன கோரியுள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள பாடசாலைகளில் சிங்களம் கட்டாயமாகப் போதிக்கப்படவேண்டும். இதற்கான சகல நடவடிக்கைகளும் உடனடியாக எடுக்கப்படுவது மிகவும் முக்கியமாகும் என்றும் திரு. ராஜரத்ன அக்கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அண்மையில் வெளியான திறைசேரிச் சுற்றறிக்கைகள் (மொழி விஷயத்தில்) குறித்தும் திரு. ராஜரத்ன ஆட்சேபம் தெரிவித்திருக்கிறார்.

## மீண்டும்....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மருந்து உட்கொள்ளப்பட்டு ஒரு வாரத்துக்குள்ளேயே நோயின் தாக்கல் அற்றுப்போனதோடல்லாமல், நோய் கிருமிகள் பெருகி மற்றவர்களுக்குத் தோற்றும் வலியையும் அழிக்கப்படுகிறது. அமெரிக்கா, ரஷ்யா, செக்கோஸ்லவாக்கிய முதலிய நாடுகளில் இத் தடுப்பு மருந்து உபயோகத்தினால்போலியோ அறவே ஒழிக்கப்பட்டுவிட்டது.

எட்டு வயதுக்குட்பட்ட சிறுவர் எல்லோருக்கும் இலகுவில் உட்கொள்ளக்கூடிய இத்தடுப்பு மருந்தை கொடுப்பது மிகவும் அவசியம். ஆரம்பத்திலேயே நோயின் முளையைக் கிள்ளிவிட்டுவிட்டால் பின்னர் கவலைப்படவேண்டியதில்லை. ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு மூன்றுவது மாதத்தில் ஒரு முறையும் ஐந்தாவது மாதத்தில் இரண்டாவது முறையும் ஒரு வயது முடிவில் மூன்றுவது முறையாகவும் இம்மருந்தைக் கொடுப்பதே நோயை முற்றாக தடுப்பதற்கு சிறந்த வழி. டாக்டர் ஸபிள் 1962-ம் ஆண்டு இங்கு வந்திருந்தபோது இந்த முறையையே சிபார்சு செய்துள்ளார்.

கடந்த சில மாதங்களில் கொழும்பிலும் பதுளையிலும் போலியோ நோய் திடீரென்று தலை தூக்கியது. உடனே கொழும்பிலுள்ள குழந்தைகள் ஆஸ்பத்திரியிலும், முனிசிபல் வைத்திய சாலைகளிலும் ஆயிரக்கணக்கான குழந்தைகளுக்கு தடுப்பு மருந்து கொடுக்கப்பட்டது. மகாணங்களிலுள்ள ஆஸ்பத்திரிகள், மருந்துச்சாலைகளிலும் தடுப்பு இயக்கம் நடைபெற்றது. இலங்கையின் பிற பாகங்களுக்கும் இது பரவாமல் இருக்கும் பொருட்டு பெற்றோர்களும் சுகாதார அதிகாரிகளுடன் ஒத்துழைத்து தங்கள் எட்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு தடுப்பு மருந்தை கொடுத்துவிடுவது அவசியம். ஒழுங்காக இந்த மருந்தைக் கொடுத்துவந்தால் தான் போலியோ தொள்ளை நோயாக மாறுவதை தடுக்கலாம்.

— 'வருமுன் காப்போன்'

## டாஷ்கெண்ட் பேச்சுக்கள்

டாஷ்கொண்ட், ஜன. 6

சோவியத் பிரதமர் கோஜியின் இன்று நாள் முழுவதையும் பாகிஸ்தான் அதிபர் ஜனாதிபதி அயூப்கானுடனும், இந்தியப் பிரதமர் சாஸ்திரியுடனும் பேச்சுவார்த்தை நடத்துவதில் செலவழித்தார். இதனால் முன்னர் திட்டமிடப்பட்டது போல் சாஸ்திரி அயூப் பேச்சுவார்த்தை இன்று நடைபெறவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## 8-ம் திகதி அடை . . .

(1-ம்பக்கத்தொடர்ச்சி)

கொண்டாடப்படவேண்டும். பொதுமக்கள் கறுப்பு நிற உடைகளை அணியவேண்டும். மோட்டார் வாகனங்களில் கறுத்தக்கொடிகள் பறக்கவிடப்படவேண்டும்.

● சட்டத்தை மீறும் எந்த விதமான நடவடிக்கைகளிலும் முப்படையினர் இறங்காமலிருக்கவேண்டும்.

● குறிப்பிட்ட தினத்தில் ஆர்ப்பாட்டங்கள் எதிலும் பொதுமக்கள் ஈடுபடக்கூடாது.

கொழும்பு நகர மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, டாக்டர் என். எம். பெரேரா, டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா, திரு. பீட்டர் கெனமன், டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கா, திரு. மைத்திரிப்பால சேனநாயக்கா மற்றும் பல பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.


## மரண அறிவித்தல்

விஜயரட்ணம்

மானிப்பாய் மாப்பியன் மில் அதிபர் திரு. மயில்வாகனம் கைலாசபிள்ளை அவர்களின் கனிஷ்டபுத்திரனும், மானிப்பாய் இந்துக்கல்லூரி மாணவனுமாகிய கைலாசபிள்ளை விஜயரட்ணம் காலமாகிவிட்டார். அன்னாரின் பூதவுடல் இன்று வெள்ளிக்கிழமை (7-1-66 பற்பகல் 4 மணியளவில் மானிப்பாய் திற்பலி மயானதிற்கு இறுதிச் சடங்குகளுக்காக எடுத்துச் செல்லப்படும். ம. கைலாசபிள்ளை, மாப்பியன் மில் அதிபர். 1716


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org